கழகத் தலைவர் - முதலமைச்சர் பிறந்தநாள் விழா காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தொடர் 72 பொதுக்கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் மார்ச்.1 அன்று காஞ்சி தெற்கு மாவட்ட முழுவதும் வார்டு, கிளைகள் தோறும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி அறுசுவை உணவு வழங்குதல், காஞ்சிபுரம் – மதுராந்தகம் அரசு பொது மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் அதனை தொடர்ந்து தொடர் 72 பொதுக்கூட்டங்கள், நலத்திட்டங்கள் மருத்துவ முகாம் விளையாட்டுப் போட்டிகள் மரக்கன்று நடுதல் நடைபெறவுள்ளது. பொதுக் கூட்டங்கள் விவரம் வருமாறு:–

வரிசை எண்	பேச்சாளர் பெயர்	தேதி	மாநகரம்,நகரம் ஒன்றியம் பகுதி பேரூர்	கூட்டம் ஏற்பாட்டு
1.	சேலம் சுஜாதா	25.02.2025	சித்தாமூர் கிழக்கு ஒன்றியம்	ஒன்றிய இளைஞர் அணி
2.	ஈரோடு இறைவன்	25.02.2025	இடைக்கழி நாடு பேரூராட்சி	பேரூர்கழகம்
3.	கவிஞர் நன்மாறன்	25.02.2025	இலத்தூர் வடக்கு ஒன்றியம்	ஒன்றியகழகம்
4.	கவிஞர் நன்மாறன்	25.02.2025	இலத்தூர் தெற்கு ஒன்றியம்	ஒன்றியகழகம்
5.	சைதை சாதிக்	26.02.2025	சித்தாமூர் மேற்கு ஒன்றியம்	ஒன்றியகழகம்
6.	சைதை சாதிக்	26.02.2025	மதுராந்தகம் தெற்கு ஒன்றியம்	ஒன்றிய இளைஞர்அணி
7.	கந்திலி கரிகாலன்	27.02.2025	சாலவாக்கம் ஒன்றியம்	ஒன்றியகழகம்
8.	கந்திலி கரிகாலன்	27.02.2025	வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம்	ஒன்றிய இளைஞர்அணி
9.	அத்திபட்டு சாம்ராஜ்	27.02.2025	காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம்	ஒன்றியகழகம்
10.	கரூர் முரளி	28.02.2025	மதுராந்தகம் நகரம்	நகர இளைஞர்அணி
11.	கரூர் முரளி	28.02.2025	அச்சரப்பாக்கம் பேரூர்	பேரூர் இளைஞர்அணி
12.	எழும்பூர் கோபி நாத் யாசர் அரபாத்	28.02.2025	திருக்கழுகுன்றம் தெற்குஒன்றியம்	ஒன்றிய இளைஞர்அணி
13.	எழும்பூர் கோபி நாத் யாசர் அரபாத்	28.02.2025	இலத்தூர் வடக்கு ஒன்றியம்	ஒன்றிய இளைஞர்அணி
14.	நெல்லிகுப்பம் புகழேந்தி	02.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி 4	மாநகர கழகம்
15.	R.S பாரதி சூர்யா வெற்றிக்கொண்டன்	06.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி 2	மாநகர கழகம்
16.	சிவாஜி கிரிஷ்ணமூரத்தி	7.03.2025	வாலாஜாபாத் பேரூர் .	பேரூர் கழகம்
17.	சிவாஜி கிரிஷ்ணமூரத்தி	7 .03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி 3	மாநகரகழகம்
18.	சிவாஜி கிரிஷ்ணமூரத்தி	8 .03.2025	காஞ்சிபுரம் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
19.	சிவாஜி கிரிஷ்ணமூரத்தி	8 .03.2025	வாலாஜாபாத் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
20.	பேராசிரியர்கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்	8.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநகர கழகம் பகுதி 1
21.	கடலூர் புகழேந்தி	9.3.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாவட்ட இளைஞர்அணி
22.	காசிமுத்து மாணிக்கம்	10.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநிலவர்த்தக அணி
23.	திண்டுக்கல் ஐ .லியோணி	14.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநகர கழகம்பகுதி 3
24.	பொன்னேரி சிவா	15.03.2025	சித்தாமூர் கிழக்கு ஒன்றியம்	ஒன்றியகழகம்
25.	பொன்னேரி சிவா	15.03.2025	சித்தாமூர் மேற்கு ஒன்றியம்	இளைஞர் அணி
26.	ஆலந்தூர் மலர்மன்னன்	15.03.2025	இலத்தூர் தெற்கு ஒன்றியம்	இளைஞர் அணி
27.	ஒப்பில்லாமணி	15.03.2025	மதுராந்தகம் தெற்குஒன்றியம்	இளைஞர் அணி
28.	தக்கோலம் தேவபாலன்	16.03.2025	அச்சரப்பாக்கம் வடக்குஒன்றியம்	இளைஞர் அணி
29.	தக்கோலம் தேவபாலன்	16.03.2025	அச்சரப்பாக்கம் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
30.	எட்டடையபுரம்தமிழ்பிரியன்	16.03.2025	அச்சரப்பாக்கம் பேரூர்	பேரூர் கழகம்
31.	எட்டடையபுரம்தமிழ்பிரியன்	16.03.2025	மதுராந்தகம் நகரம்	இளைஞர் அணி
32.	ஆரணி மாலா	17.03.2025	வாலாஜாபாத் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
33.	ஆரணி மாலா	17.03.2025	வாலாஜாபாத் தெற்குஒன்றியம்	பொதுக்குழு உறுபினர்
34.	ஈரோடு சத்யவதி	17.03.2025	சித்தாமூர் மேற்குஒன்றியம்	இளைஞர் அணி
35.	ஈரோடு சத்யவதி	17.03.2025	அச்சரப்பாக்கம் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
36.	ஆரூர் மணிவண்ணன்	18.03.2025	காஞ்சிபுரம் தெற்குஒன்றியம்	தலமை செயற்குழு
37.	ஆரூர் மணிவண்ணன்	18.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநகர கழகம் பகுதிஇளைஞர் அணி
38.	திருப்பூர் ரஜினி செந்தில்	18.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநில நெசவாளர் அணி
39.	திருப்பூர் ரஜினி செந்தில்	18.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநகரஇளைஞர்அணி
40.	முரசொலி மூர்த்தி	19.03.2025	வாலாஜாபாத் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
41.	சூர்யா கிருஷ்ணமூர்த்தி செய்தி தொடர்பு துணை செயலாளர்	19.03.2025	காஞ்சிபுரம் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
42.	திருப்பூர் மனோகர் பாபு	18.03.2025	காஞ்சிபுரம் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
43.	திருப்பூர் மனோகர் பாபு	18.03.2025	வாலாஜாபாத் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
44.	குடியாதம் பெரிய கோடீஸ்வரன்	20.03.2025	மதுராந்தகம் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
45.	குடியாதம் பெரிய கோடீஸ்வரன்	20.03.2025	அச்சரப்பாக்கம் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
46.	வண்ணை புகாரி	20.03.2025	சாலவாக்கம் ஒன்றியம்	ஒன்றியகழகம்
47.	தமிழ்தாசன்	20.03.2025	வாலாஜாபாத் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
48.	ஈரோடு இளைய கோபால்	21.03.2025	மதுராந்தகம் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
49.	ஈரோடு இளைய கோபால்	21.03.2025	மதுராந்தகம் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
50.	பவானி கண்ணன்	21.03.2025	இலத்தூர் வடக்கு ஒன்றியம்	ஒன்றியகழகம்
51.	பவானி கண்ணன்	21.03.2025	இலத்தூர் தெற்கு ஒன்றியம்	ஒன்றியகழகம்
52.	நாத்திகம் நாகராஜன்	22.03.2025	திருக்கழுகுன்றம் தெற்கு	ஒன்றியகழகம்
53.	நாத்திகம் நாகராஜன்	22.03.2025	இலத்தூர் தெற்கு ஒன்றியம்	இளைஞர் அணி
54.	போடி காமராஜ்	22.03.2025	சித்தாமூர் கிழக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
55.	போடி காமராஜ்	22.03.2025	இடைக்கழி நாடு பேரூராட்சி	பேரூராட்சி
56.	விஷார் தமிழரசன்	24.03.2025	அச்சரப்பாக்கம் வடக்குஒன்றியம்	ஒன்றியகழகம்
57.	நாகம்மையார்	24.03.2025	கருங்குழி பேரூர்	பேரூராட்சி
58.	கலைச்செல்வி ஜகந்நாதன் சிலம்பரசன்	24.03.2025	வாலாஜாபாத் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
59.	கலைச்செல்வி ஜகந்நாதன் சிலம்பரசன்	24.03.2025	வாலாஜாபாத் வடக்குஒன்றியம்	இளைஞர் அணி
60.	அணவயல் கணேசன்	25.03.2025	உத்திரமேரூர் ஒன்றியம்.	ஒன்றியகழகம்
61.	அணவயல் கணேசன்	25.03.2025	சாலவாக்கம் ஒன்றியம்	ஒன்றியகழகம்
62.	பசும்பொன் ரவிசந்திரன்	25.03.2025	சித்தாமூர் கிழக்குஒன்றியம்	ஆதிதிராவிடர்
63.	பசும்பொன் ரவிசந்திரன்	25.03.2025	அச்சரப்பாக்கம் வடக்குஒன்றியம்	மாணவர் அணி
64.	குமரி பிரபாகரன்	26.03.2025	உத்திரமேரூர் ஒன்றியம்.	ஒன்றியகழகம்
65.	குமரி பிரபாகரன்	26.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநகரபகுதி இளைஞர்அணி
66.	மதிவாணன்	27.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	மாநகரகழகம் பகுதி 4
67.	ஆடுதுறை உத்ரபதி	27.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	சுற்றுசூழல் அணி
68.	தூத்துக்குடி சரத்பாலா	28.03.2025	மதுராந்தகம் வடக்கு ஒன்றியம்	ஒன்றிய இளைஞர்அணி
69.	தூத்துக்குடி சரத்பாலா	28.03.2025	கருங்குழி பேரூர்	பேரூர்கழகம்
70.	தமிழ் சாதிக்	28.03.2025	மதுராந்தகம் தெற்குஒன்றியம்	ஒன்றியகழகம்
71.	தாயகம் கவி	30.03.2025	காஞ்சிபுரம் மாநகராட்சி	பகுதி4வார்டு38

எனவே சம்பந்தப்பட்ட மாநகர, நகர, ஒன்றியம், பகுதி பேரூர் செயலாளர்கள் கூட்ட அழைப்பிதழை முறையாக அச்சிட்டு அந்த அந்த பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர், கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் அழைப்பிதழை தந்து பெருந்திரளாக பங்கேற்குமாறும் கூட்ட மேடையிலே நலத்திட்டங்கள் வழங்கிட ஏற்பாடு செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

க.சுந்தர் எம்.எல்.ஏ.,
செயலாளர்– காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் இயங்கும்

நியாய விலைக் கடைகளை ஒருங்கிணைத்து தனித்துறை ஏற்படுத்த வேண்டும்!

கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 24 -

தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக் கடை தொ.மு.ச. தமிழ்நாடு முழுக்க மாவட்ட நிர்வாகி கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (23.2.2025) சென்னை தொ.மு.ச. அலுவலகம் கூட்ட அரங்கில் மாநில நியாய விலைக் கடை தொ.மு.ச. பொதுச் செயலாளர் இரா.பொன்னுராம் வரவேற்பில் நடைபெற்றது.

தமிழ்நாடு கூட்டுறவு நியாய விலைக்கடை தொ.மு.ச.வின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நேற்று (23.02.2025 ஞாயிறு) காலை 10.00 மணியளவில் சென்னை தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான "கலைஞரகத்தில்" சங்கத் தலைவர் எஸ்.உமாகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நமது சங்கத்தின் சிறப்புத் தலைவரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளருமான மு.சண்முகம் எம்.பி., பேரவைத் தலைவர் கி.நடராசன், பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் , பேரவை அலுவலகச் செயலாளர் ஆ.சீ.அருணகிரி, மொத்த விற்பனை பண்டகசாலை பொதுச்செயலாளர் சு. பத்மநாபன் மற்றும் பேரவை நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர். இதனைத் தொடர்ந்து மாவட்டத்திற்கு ஒருவர் விதம் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து இரா.பொன்னுராம் கூறியதாவது:-

1. பல்வேறு துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் நியாயவிலைக் கடைகளை ஒருங்கிணைத்து தனித்துறை ஏற்படுத்த ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

2. சமவேலைக்கு சமஊதியம் என்கின்ற கோட்பாட்டில் கூட்டுறவு நியாயவிலைக்கடை பணியாளர்களுக்கும் மற்றும் பண்டகசாலைப் பணியாளர்களுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

3. நியாயவிலைக்கடை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள 3% வித்தியாச அகவிலைப்படியினை வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

4. பதிவாளர் அவர்கள் உத்தரவின்படி சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்திற்கு விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களுக்கு ஊக்கத் தொகை குடும்ப அட்டைக்கு ரூ.0.50 பைசா கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வரும் காலங்களில் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்திற்கு ஊக்கத்தொகை ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.3.00ஆக உயர்த்தி வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

5. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அனைத்து கட்டுப்பாடு பொருட்களையும் எடை குறைவின்றி வழங்கிட ஏதுவாக பொட்டலமிட்டு வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

6. சொந்த கட்டிடங்களில் இயங்கிவரும் நியாயவிலைக் கடைகளில் பழுதடைந்த கட்டிடங்களை புதுப்பித்துத் தர வேண்டும் எனவும், மேலும் அனைத்து நியாயவிலை கட்டிடங்களுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்தி தர ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

7. 1000 குடும்ப அட்டைகள் உள்ள நியாயவிலை கடைகளுக்கு ஒரு கட்டுநர் என்பதை மாற்றி 800 குடும்ப அட்டை உள்ள நியாயவிலை கடைகளுக்கு ஒரு கட்டுநர் நியமனம் செய்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

8. நியாயவிலை கடைகளில் கட்டுப்பாடற்றப்பொருட்கள் விற்பனைக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுவதில்லை. எனவே, வரும் காலங்களில் ஊக்கத்தொகை வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

9. வசிக்கும் பகுதியிலிருந்து 20கி.மீ அப்பால் பணிபுரியும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள மற்ற கூட்டுறவு சங்கங்களின் காலிபணியிடத்திற்கு பணி தொடர்ச்சியுடன் பணியிட மாற்றம் செய்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

10. அரசு அலுவலகங்களுக்கு உள்ளதை போல் நியாயவிலைக் கடைகளுக்கும் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளையும் விடுமுறை தினமாக அறிவித்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

11. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் பொதுவிநியோகத்திட்டப் பொருட்களை நியாயவிலைக்கடைகளுக்கு நகர்வு செய்திடும் பணிக்கு விளிம்புத் தொகையினை (Margin) அதிகப்படுத்தி வழங்கிட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

12. கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்குண்டான பொதுவிநியோகத்திட்ட மானியத் தொகைகளை ஒவ்வொரு நிதியாண்டு முடிந்தவுடன் முழு மானியத் தொகையினையும் விடுவித்திட ஆவன செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

13. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியம் நிர்ணயம் செய்து 5 ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் புதிய ஊதியம் நிர்ணயித்து ஆணை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் மேயர் பிரியா ராஜன், கொளத்தூர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஏ.நாகராசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சி.மகேஷ்குமார், கே.சந்துரு, கழக பொதுக்குழு உறுப்பினர், சென்னை மாநகராட்சி, 6 வது மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் முன்னிலையில் 64 (அ) வட்டக் கழகச் செயலாளர் எம்.டி.தமிழ்ச்செல்வன் தலைமையில் ஜி.கே.எம். காலனி, 34 வது தெருவில் பொதுமக்களுக்கு அன்னம் தரும் அமுதக் கரங்கள் திட்டத்தில் காலை உணவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

111-வது வட்டக் கழகக் கூட்டம்!

வட்டச் செயலாளர் ஆர்.பாபு வேண்டுகோள்!

சென்னை, பிப்.24-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 111 வது வட்ட கழக தி.மு.க சார்பில் இன்று (24.02.2025 - திங்கள் கிழமை) மாலை 5.00 மணிக்கு அஜிஸ் முல்க் 2வது தெரு சமூக நலக் கூடம் அருகில் 111வட்ட கழக அவை தலைவர் சி.பார்த்தசாரதி தலைமையில் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு ஆலோசனைக்கிணங்க நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் மற்றும் ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் கௌதமன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மார்ச் 1 முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப் படவிருப்பதால் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மற்றும் அணிகளின் மாவட்ட, பகுதி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பி.எல்.ஏ.2, பி.எல்.சி, மகளிர் அணி, இளைஞர் அணி கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.பி. கணேசன்

பிப்ரவரி 24 (2017)

கழகம் தொடங்கிய காலம் முதல் 1997ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வீரபாண்டி ஒன்றியக் கழகச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமை செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

எஸ்.பாப்பாரப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர், வீரபாண்டி ஒன்றிய துணைப் பெருந்தலைவர், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், சேலம் மாவட்ட நிலவள வங்கி துணை தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.